www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்றாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு – 2025

## ஆறாம் வகுப்பு

**நேரம்: 2.00 மணி** **அறிவியல்** **மதிப்பெண்கள்:60**

**I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்** 5x1=5

1. மாலுமி திசைகாட்டும் கருவிகளை முதன் முதலில் செய்து பயன்படுத்தியவர்கள்
   அ) இந்தியர்கள் ஆ) ஐரோப்பியர்கள் இ) சீனர்கள் ஈ) எகிப்தியர்கள்
2. நன்னீரில் சுமார் 30% நீர் எங்கே காணப்படுகிறது ?
   அ) பனி ஆறுகள் ஆ) நிலத்தடி நீர் இ) மற்ற நீர் ஆதாரங்கள் ஈ) மேற்பரப்பு நீர்
3. இயற்கை ஒட்டும் பொருள் ________ இருந்து தயாரிக்கப்படுகின்றது.
   அ) புரதங்களில் ஆ) கொழுப்புகளில் இ) ஸ்டார்ச்சில் ஈ) வைட்டமின்களில்
4. பின்வருவனவற்றுள் எது வேர் அல்ல ?
   அ) உருளைக்கிழங்கு ஆ) கேரட் இ) முள்ளங்கி ஈ) டர்னிப்
5. மையச்செயலாகப் பெட்டியினுள் காணப்படாதது எது ?
   அ) தாய்ப்பலகை ஆ) SMPS இ) RAM ஈ) MOUSE

**II கோடிட்ட இடங்களை நிரப்புக:** 5x1=5

6. ஒரு காந்தத்திற்கு எப்பொழுதும் ________ துருவங்கள் இருக்கும்.
7. நீரோட்டம் மற்றும் நீர் விநியோகத்தினை முறைப்படுத்தும் பொருட்டு ஆற்றின் குறுக்கே ________ கட்டப்படுகிறது.
8. உழவனின் நண்பன் என அழைக்கப்படுவது ________ ஆகும்.
9. ________ என்ற நிகழ்வின் மூலம் கழிவுப் பொருள்களிலிருந்து புதிய பொருள்களை உருவாக்கலாம்.
10. ________ இலையின் சாறு இருமலையும், மார்புச் சளியையும் குணமாக்குகிறது.

**III சரியா ? தவறா ? தவறாக இருந்தால் சரியான விடையை எழுதுக:–** 5x1=5

11. உருளை வடிவ காந்தத்திற்கு ஒரே ஒரு துருவம் மட்டுமே உண்டு.
12. குளிர்வித்தலால் புற்களின் மீது பனி உருவாகும்.
13. ஜிப்சத்தை சூடுபடுத்துவதன் மூலம் பாரிஸ்சாந்து கிடைக்கின்றது.
14. அளவுக்கு அதிகமாக களைக் கொல்லிகளைப் பயன்படுத்தினால் ஒலி மாசுபாடு உருவாகும்.
15. கரும்புத் தாவரம் உயிரி எரிபொருளாகப் பயன்படுகிறது.

**IV பின்வருவனவற்றைப் பொருத்துக** 5x1=5

| | | |
|---|---|---|
| 16. மேற்பரப்பு நீர் | – | காற்று மாசுபாடு |
| 17. சிமெண்ட் | – | உள்ளீட்டு கருவி |
| 18. புகை | – | நறுமணப் பொருள் |
| 19. ஏலக்காய் | – | ஏரிகள் |
| 20. Keyboard | - | RCC |

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



VI அறிவியல்

## V ஒப்புமை தருக:–

5x1=5

21. இரப்பர் : காந்தத்தன்மையற்ற பொருள் ; இரும்பு : ______
22. நிலத்தடி நீர் : ______ ; மேற்பரப்பு நீர் : ஏரிகள்
23. யூரியா : கனிம உரம் ; மண்புழு உரம் : ______
24. சாக்கடைக் கழிவுகள் : நீர் மாசுபாடு ; வீட்டில் பயன்படுத்தப்படும் நெகிழி : ______
25. தென்னை : நார் ; ரோஜா : ______

## VI குறுகிய விடையளி: (ஏதேனும் பத்து மட்டும்)

10x2=20

26. காந்த துருவுங்களின் ஈர்க்கும் மற்றும் விலக்கும் தன்மை குறித்து எழுதுக.
27. ஏதேனும் நான்கு நீர் மூலங்களைக் குறிப்பிடவும்.
28. ஆர்க்டிக் மற்றும் அண்டார்க்டிக் பகுதியில் உள்ள நீர்வாழ் விலங்குகள் எவ்வாறு உயிர் வாழ்கின்றன ?
29. பாரிஸ் சாந்தின் பயன்களை விவரிக்கவும்.
30. சோப்பில் அடங்கியுள்ள மூலப்பொருள்கள் யாவை ?
31. சிமெண்ட் தயாரிப்பில் ஜிப்சம் எதற்காகப் பயன்படுகிறது ?
32. சூழ்நிலை மண்டலம் – வரையறு.
33. மாசுப்பாட்டின் வகைகளைக் குறிப்பிடுக.
34. மறு சுழற்சி அடையக்கூடிய பொருள்களில் எவையேனும் இரண்டினை எழுதுக.
35. உணவுத் தாவரங்கள் என்றால் என்ன ?
36. வன்பொருள் மற்றும் மென்பொருள் விளக்குக.
37. மரக்கட்டையின் பயன்கள் யாவை ?
38. சோப்பில் உள்ள இரு வெவ்வேறு வகை மூலக்கூறுகள் என்னென்ன ?

## VII விரிவான விடையளி (ஏதேனும் மூன்று மட்டும்)

3x5=15

39. உன்னிடம் ஓர் இரும்பு ஊசி தரப்படுகிறது. அதனை நீ எவ்வாறு காந்தமாக்குவாய் ? (5)
40. அ) மேற்பரப்பு நீரினை நிலத்தடி நீரிலிருந்து வேறுபடுத்தவும். (3)
    ஆ) "நீர் சேமிப்பு" என்ற தலைப்பில் இரண்டு வாசகங்களை உமது நடையில் எழுதவும். (2)
41. அ) மண்புழு ஏன் உழவனின் நண்பன் என்று அழைக்கப்படுகின்றது ? (3)
    ஆ) ஜிப்சத்தின் பயன்களைக் கூறுக. (2)
42. வலுவூட்டப்பட்ட சிமெண்ட் காரை மற்றும் அதன் பயன்பாடுகளைப் பற்றி விவரிக்கவும். (5)
43. ஒலி மாசுபாடு பற்றி குறிப்பு தருக. (5)
44. எவையேனும் ஐந்து தாவரங்களையும், அவற்றின் எந்தப் பகுதியை உண்கிறோம் என்பதையும் எழுதுக. (5)

***/***

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com